## மூன்றாம் பருவ மாதிரி தொகுத்தறித் தேர்வு - 2022

**வகுப்பு : 7** | **அறிவியல்** | **மதிப்பெண் : 60** | **காலம் : 2.00 மணி**

**I. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (10 X 1 = 10)

1. ஒளியானது எப்பொழுதும் _______ செல்லும்.
   (1) வளைகோட்டில் (2) நேர்கோட்டில்
   (3) வளைந்து பின் நேராக (4) வட்ட வடிவில்

2. ஒளி என்பது ஒருவகை _______.
   (1) பொருள் (2) ஊடகம்
   (3) துகள் (4) ஆற்றல்

3. _______ தொலைநோக்கியைக் கண்டறிந்தார்.
   (1) ஹான் லிப்பர்ஷே (2) கலிலியோ
   (3) நிக்கோலஸ் காப்பர் நிகஸ் (4) தாலமி

4. அனேக இளம் நட்சத்திரங்களைக் கொண்ட விண்மீன் திரளுக்கு _______ என்று பெயர்.
   (1) நீள்வட்ட விண்மீன் திரள் (2) ஒழுங்கற்ற விண்மீன் திரள்
   (3) குழுக்கள் (4) சுருள் விண்மீன் திரள்

5. வலுவான இழை _______.
   (1) ரேயான் (2) நைலான்
   (3) அக்ரிலிக் (4) பாலியெஸ்டர்

6. PET என்பது _______ ன் சுருக்கெழுத்தாகும்.
   (1) பாலியெஸ்டர் (2) பாலியெஸ்டர் மற்றும் டெரிலீன்
   (3) பாலிஎத்திலீன் டெரிதாலேட் (4) பாலித்தீன்டெரிலீன்

7. _______ என்பது வயிற்று அமிலத்தை நடுநிலையாக்குகின்றது.
   (1) ஆண்டிபயாட்டிக் (2) ஆண்டிபைரடிக்
   (3) அமில நீக்கி (4) சைக்கீடெலிக்

8. மெழுகுவர்த்தியின் சுடரில் வெப்பமான பகுதி _______.
   (1) நீலம் (2) மஞ்சள்
   (3) கருப்பு (4) உள்பகுதி

9. முட்டையில் _______ அதிகம் உள்ளது.
   (1) புரதம் (2) கார்போஹைட்ரேட்
   (3) கொழுப்பு (4) அமிலம்

10. பிரித்தெடுப்பவரின் நோய் என்றழைக்கப்படுவது _______.
    (1) ஆஸ்துமா (2) ஆந்தராக்ஸ்
    (3) டைஃபாய்டு (4) காலரா

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** (5 X 1 = 5)

11. ஒரு சமதள ஆடியானது உருவாக்கும் பிம்பம் _______.
12. சூரியமையக் கோட்பாட்டினை முன்மொழிந்தவர் _______.
13. செயற்கை இழைக்கு ஒரு எடுத்துக்காட்டு _______.
14. தேன் கூட்டில் இருந்து _______ பெறப்படுகின்றது.
15. இயற்கை இழைகளிலேயே வலிமையான இழை _______.

III. **பொருத்துக.** (5 X 1 = 5)

| | | |
|---|---|---|
| 16. அகன்ற ஒளிமூலம் | - | ஒட்டாத சமையற் கலன்கள் |
| 17. ஆண்டிபைரடிக் | - | கோழிப்பண்ணை |
| 18. டெஃப்லான் | - | புற நிழல் |
| 19. ரோகினி | - | உடல் வெப்பநிலையைக் குறைக்கும் |
| 20. பிராய்லர் | - | SLV - 3 |

IV. **குறுகிய விடையளி. (எவையேனும் 10 மட்டும்)** (10 X 2 = 20)

21. எதிரொளிப்பு விதிகளை, படத்துடன் கூறுக.
22. முப்பட்டகம் என்றால் என்ன?
23. விண்மீன் மண்டலம் என்றால் என்ன?
24. ஒப்புமை தருக.
    அ) பழைய நட்சத்திரங்கள் : நீள்வட்ட விண்மீன் திரள் :: புது நட்சத்திரங்கள் : ________.
    ஆ) அருகிலுள்ள விண்மீன் திரள் : ஆண்ட்ரமெடா :: அருகிலுள்ள நட்சத்திரம் : ________.
25. 5 R கொள்கை என்பது என்ன?
26. ஒப்புமை தருக.
    அ) பருத்தி : இயற்கை :: பாலியெஸ்டர் : ________.
    ஆ) PLA கரண்டி : மட்கும் தன்மை :: நெகிழி கரண்டி : ________.
27. எரிதல் வெப்பநிலை என்றால் என்ன?.
28. ஒரு நல்ல எரிபொருளின் பண்புகள் ஏதேனும் இரண்டு கூறுக.?
29. நெருப்பை உற்பத்தி செய்வதற்கான அத்தியாவசிய தேவைகள் யாவை?
30. விலங்குகளில் இருந்து பெறப்படும் உணவுப் பொருள்கள் யாவை?
31. கம்பளியின் சிறப்பம்சங்கள் மூன்றினை எழுதுக?
32. கோழிப்பண்ணையில் காணப்படும் பொதுவான நோய்கள் யாவை?
33. ஓர் ஒளிக்கதிர் $50^0$ கோணத்தில் ஒரு சமதள ஆடியில் விழுகிறது. எனில், எதிரொளிப்புக் கோணம் என்ன?

V. **விரிவாக விடையளி. (எவையேனும் 4 மட்டும்)** (4 X 5 = 20)

34. நிழலின் பண்புகளை விவரி?
35. விண்மீன் மண்டலத்தைக் குறித்து சிறு குறிப்பு வரைக
36. நெகிழிப் பொருள்களை அகற்றும் பாதுகாப்பான முறைகள் சிலவற்றினை பரிந்துரைக்கவும்.
37. மெழுகுவர்த்திச் சுடரின் படம் வரைந்து பாகங்களைக் குறி?
38. எரிதலின் வகைகளை விவரி.
39. கம்பளியின் சிறப்பம்சங்கள் யாவை?